## கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், அரியலூர்

**முன்னிலை: திருமதி.M.S.மணிமேகலை, எல்.எல்.எம்.,**
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
அரியலூர்.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06 ஆம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண்.134/2025.**
(C.N.R.No.TNAL 01-003818-2025)

(முதன்மை பதிவேட்டு வழக்கு எண்.34/2025 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செந்துறை)

| | | |
|---|---|---|
| அரசுக்காக குற்றமுறையிடுபவர் | | காவல் ஆய்வாளர்,<br>குவாகம் காவல் நிலையம்<br>குற்ற எண்.98/2023. |
| எதிரி | | **தேவேந்திரன், வயது 53,**<br>த/பெ மகாலிங்கம்,<br>வடக்குத்தெரு,<br>அசாவீரன்குடிகாடு,<br>செந்துறை வட்டம்,<br>அரியலூர் மாவட்டம். |
| நீதிமன்ற காவலில் இருந்த காலம் | | 10.10.2023 – 17.10.2023 |
| நீதிமன்றத்தில் புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | | 10.10.2023 |
| இவ்வழக்கு மேல்விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப் பட்ட நாள் | | 05.11.2025 |
| எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 228-ன்கீழ் குற்றச்சாட்டுக்கள் குறித்து வினவப்பட்ட நாள் | | 01.04.2026 |
| வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | | **முதலாவதாக (எதிரி மீது):**<br>கடந்த 10.10.2023ம் தேதி 12.45 மணிக்கு புகையிலைப் பொருட்களை விற்பனை |

| | | |
|---|---|---|
| | | செய்யக்கூடாது என்றும், அதனை உபயோகித்தால் மனித உடல் உள்ளுறுப்புகள் பாதிக்கப்பட்டு உயிர்சேதம் ஏற்படும் எனத் தெரிந்தும், சுயலாபம் அடைவதற்காக, அசாவீரன்குடிக்காடு வடக்குத்தெருவில் உள்ள உமக்கு சொந்தமான பெட்டி கடையில் அரசால் தடை செய்யப்பட்ட மனித உடலுக்கும், உயிருக்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய புகையிலைப் பொருட்களை வைத்திருந்ததற்காக **இ.த.ச.பிரிவு 272** இன் படி தண்டிக்கப்படத்தக்கவர்கள்.<br><br>**<u>இரண்டாவதாக (எதிரி மீது):</u>** மேற்படி அதே நாள் மேற்சொன்ன சம்பவத்தின் தொடர்ச்சியாக சுயலாபம் அடைவதற்காக அசாவீரன்குடிக்காடு வடக்குத்தெருவில் உள்ள உமக்கு சொந்தமான பெட்டி கடையில் அரசால் தடை செய்யப்பட்ட மனித உடலுக்கும், உயிருக்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய பொருளை விற்பனைக்கு வைத்திருந்ததற்காக **இ.த.ச.பிரிவு 273** இன் படி தண்டிக்கப்படத்தக்கவர்.<br><br>**<u>மூன்றாவதாக (எதிரிகள் மீது):</u>** மேற்படி அதே நாள், அதே இடம், அதே நேரம், மேற்சொன்ன சம்பவத்தின் தொடர்ச்சியாக, புகையிலைப் பொருட்களை விற்பனை செய்யக்கூடாது, அதனை உபயோகித்தால் மனித உடல் உள்ளுறுப்புகள் |

| | | |
|---|---|---|
| | | பாதிக்கப்படும் உயிர்சேதம் ஏற்படும் என தெரிந்தும், சுயலாபம் அடைவதற்காக, அசாவீரன்குடிக்காடு வடக்குத்தெருவில் உள்ள உமக்கு சொந்தமான பெட்டி கடையில் அரசால் தடை செய்யப்பட்ட மனித உடலுக்கும், உயிருக்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய சுமார் 20 கிராம் எடையுள்ள Hans Chaap Tobacco – 7 பாக்கெட்டுகளை பொதுமக்கள் மற்றும் இளம்சிறார்கள் பார்க்கும்படி வெளிப்படையாக வைத்து பொது மக்களுக்கும், இளம்சிறார்களுக்கும் விற்பனை செய்து கொண்டிருந்த மேற்படி எதிரியாகிய உம்முடைய குற்றச் செய்கையானது **இ.த.ச.பிரிவு 328 r/w 59 of FSSA-2006, 7(5) of COTPA Act 2003 & 77 Juvenile Justice Act 2015** இன் படி தண்டிக்கப்படத்தக்கவர். |
| எதிரியின பதிலுரை | | குற்றவாளி இல்லை |
| கு.வி.மு.ச. பிரிவு 317-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களைத் தவிர்த்து, குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவினை எதிர்த்து மேல் முறையீட்டு நீதிமன்றங்களில் பிறப்பிக்கப் பட்டுள்ள உத்திரவின் விபரம் | | - |
| எதிரியின் தலைமறைவு மற்றும் அவரது முன்னிலை / ஆஜர்படுத்தப்பட்ட விவரம் | | இல்லை |

<table>
<tr><td>ஏதேனும் இருப்பின்</td><td></td><td></td></tr>
<tr><td>மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்டுள்ள தடை உத்தரவு மற்றும் அதன் முடிவு</td><td></td><td>இல்லை</td></tr>
<tr><td>சாட்சிகளின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td></td><td><table>
<tr><th>சாட்சி</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>20.07.2026</td><td>20.07.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>20.07.2026</td><td>20.07.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>29.07.2026</td><td>29.07.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>01.08.2026</td><td>01.08.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(பி) இன் கீழ் வினவப்பட்ட நாள்</td><td></td><td>03.08.2026</td></tr>
<tr><td>எதிரியின் பதில்</td><td></td><td>பொய் சாட்சி</td></tr>
<tr><td>நீதிபதியின் தீர்மாணம்</td><td></td><td>எதிரி இ.த.ச.பிரிவுகள் 272, 273, 328 r/w 59 of FSSA-2006, 7(5) of COTPA Act 2003 & 77 Juvenile Justice Act 2015 இன் படி குற்றவாளி இல்லை.</td></tr>
<tr><td>தண்டனை அல்லது உத்தரவு</td><td></td><td>இவ்வழக்கில் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 272, 273, 328 மற்றும் r/w 59 of FSSA-2006, 7(5) of Cotpa Act 2003 & 77 of Juvenile Justice Act 2015 இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் உரிய முறையில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரி குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 235(1) இன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி எதிரிக்கு பிணைமுறி ஏதேனும்</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | இருப்பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது<br><br>இவ்வழக்கில் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 272, 273, 328 மற்றும் r/w 59 of FSSA-2006, 7(5) of Cotpa Act 2003 & 77 of Juvenile Justice Act 2015 இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் உரிய முறையில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரி குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 235(1) இன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி எதிரிக்கு பிணைமுறி ஏதேனும் இருப்பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட அ.த.சா.ஆ.2 – (Form 91) சுமார் 20 கிராம் எடையுள்ள 7 **Hans Chaap Tobacco** செந்துறை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்து விட்டபடியால் அதனைப் பொறுத்து உத்தரவு பிறப்பிக்கவில்லை. |

இவ்வழக்கு என் முன்பாக 03.08.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்ததில், அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.M.விக்னேஷ்வரன் அவர்களும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.A.சிராஜ்தீன் அவர்கள் ஆஜராகியும், சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலித்து, இரு தரப்பு வாதங்களையும்

கேட்டு, இதுநாள் வரை எனது சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீ ர் ப் பு ரை</u>

குற்றமுறையிடுபவரான குவாகம் காவல் நிலைய ஆய்வாளர் எதிரி மீது தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையில், கடந்த 10.10.2023 ம் தேதி 12.45 மணிக்கு இவ்வழக்கின் எதிரி தேவேந்திரன் என்பவர் புகையிலை பொருட்களை விற்பனை செய்யக்கூடாது, அதனை உபயோகித்தால் மனித உடல் உள்ளுறுப்புகள் பாதிக்கப்பட்டு உயிர்சேதம் ஏற்படும் என தெரிந்தும் சுயலாபம் அடைவதற்காக அசாவீரன்குடிகாடு வடக்குத்தெருவில் உள்ள அவருக்கு சொந்தமான பெட்டி கடையில் அரசால் தடைசெய்யப்பட்ட மனித உடலுக்கும், உயிருக்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய சுமார் 20 கிராம் எடையுள்ள Hans Chaap Tobacco – 7 பாக்கெட்டுகளை பொதுமக்கள் மற்றும் இளம்சிறார்கள் பார்க்கும்படி வெளிப்படையாக வைத்து பொதுமக்களுக்கும், இளம்சிறார்களுக்கும் விற்பனை செய்து கொண்டிருந்ததாக எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 272, 273, 328 மற்றும் r/w 59 of FSSA–2006, 7(5) of Cotpa Act 2003 & 77 of Juvenile Justice Act 2015 ன்படி தண்டிக்கப்பட வேண்டியவர் என்று கூறி குவாகம் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2).** இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கையானது, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செந்துறை இன் முன்பாக தாக்கல் செய்யப்பட்டதனைப்பெற்று, முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.34/2025 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, பின்னர் அழைப்பாணையின் பேரில், எதிரியானவர் முன்னிலையானவுடன், வழக்கின் நகல்கள் இலவசமாக குற்றவியல் நடைமுறை விசாரணை சட்டம் பிரிவு 207–இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது, இவ்வழக்கில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு

அமர்வு நீதிமன்றத்தால் மட்டும் விசாரிக்கப்படத்தக்கது என்ற காரணத்தினால், கற்றறிந்த குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக அரியலூர், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 209-இன் கீழ் சமர்ப்பித்துள்ளார். அவ்வாறு, சமர்ப்பிக்கப்பட்ட வழக்கு கோப்பினை, அரியலூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் பெறப்பட்டு, அமர்வு வழக்கு எண்.134/2025 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில், வழக்கு கோப்பானது விசாரணைக்காக தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரியலூருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி வழக்கு கோப்பானது அந்நீதிமன்றத்தால் பெறப்பட்டு மேல்நடவடிக்கைக்காக உத்தரவிடப்பட்டுள்ளன.

3) இவ்வழக்கின் எதிரியானவர், மேற்படி நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரீசலிக்கப்பட்டும், எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் முதல் நோக்கு வழக்கில் புலனாவதால், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தினைப் பொறுத்து வினவிய பொழுது, எதிரி தனது குற்றத்தை மறுத்த காரணத்தினால், பின்னர் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரீசிலிக்கப்பட்டும், எதிரி மீது இ.த.ச.பிரிவு 272, 273, 328 மற்றும் r/w 59 of FSSA-2006, 7(5) of Cotpa Act 2003 & 77 of Juvenile Justice Act 2015 ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் படித்துக் காட்டி விளக்கி வினவியபோது, எதிரி தம் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்தார். எதிரியின் குற்ற மறுப்பினை அடுத்து அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல்

அ.த.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், சான்றுபொருட்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**4).** (I) அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள 4 சாட்சிகளில், திரு.இளவரசன், முதல் நிலை தலைமைக் காவலர் அவர்கள் அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் சம்பவம் பற்றியும், சம்பவத்தில் எதிரியை கைது செய்ய உதவியாக இருந்தது பற்றியும், கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் செய்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி அவர் அளித்துள்ள சாட்சியத்தில், குவாகம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராக பணியில் இருந்தபொழுது 10.10.2023 ம் தேதி காலை 11.00 மணியளவில் அரசால் தடைசெய்யப்பட்ட போதைப்பொருளான ஹான்ஸ் பாக்கெட்டை அசாவீரன்குடிகாடு கிராமத்தைச் சேர்ந்த ஆஜர் எதிரி தேவேந்திரன் என்பவர் அவரது கடையில் விற்பதாக தகவல் கிடைத்தது என்றும், உடனே சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் புண்ணியகோடி மற்றும் முதல்நிலை காவலர் 1077 கலைவாணன் ஆகியோருடன் அவரும் சேர்ந்து சாதாரண உடையில் சென்று கவனித்தபோது, சிறப்பு உதவி ஆய்வாளர் புண்ணியகோடி என்பவர் ஹான்ஸ் பாக்கெட் வாங்கி வந்த ஒருவரை மறித்து எங்கிருந்து ஹான்ஸ் வாங்கி வருகிறாய் என்று விசாரித்தபோது அவர் ஆஜர் எதிரியின் கடையில் இருந்து ஹான்ஸ் வாங்கி வருவதாக சொன்னார் என்றும், அவர் எதிரியின் கடை மாரியம்மன் கோவிலுக்கு பின்னால் இருப்பதாகவும் சொன்னார் என்றும், உடனே தாங்கள் சென்று அந்த கடையில் சோதனை போட்டபோது அந்த கடையில் 7 பாக்கெட் ஹான்ஸ் இருந்து கைப்பற்றினோம் என்றும், அதன்பிறகு ஆஜர் எதிரி சோதனைக்கு பின் ஹான்ஸ் பாக்கெட் விற்பனை செய்ததை ஒப்புக்கொண்டரார் என்றும், அதன்பிறகு பொதுமக்கள் யாரும் சாட்சி சொல்ல யாரும் முன்வராததால், தங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றுதல்

மகசரில் ஹான்ஸ் பாக்கெட்டுகளை கைப்பற்றினார் என்றும், அதில் தானும், 1077 கலைவாணன் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையொப்பம் அவருடையதுதான் என்றும் கூறியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்தார் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கில் திரு.கலைவாணன், தலைமைக் காவலர் அரசு தரப்பில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மேற்படி அ.சா.1 இன் சாட்சியத்தை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் திரு.ஏழுமலை என்பவர் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் அளித்துள்ள சாட்சியத்தில், இந்த வழக்கு சம்மந்தமாக தமக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் நேற்று என்னை சம்மன் கொடுக்கும்போதுதான் விசாரித்தார்கள். இதற்கு முன்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று கூறி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி ஆவார்.

**5).** அத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு, எதிரியிடம் சாட்சியங்களில் அவர்களுக்கு பாதகமாக உள்ள விவரங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1) (b)-ன்கீழ் விளக்கி கூறி வினவியபோது, எதிரி சாட்சியங்களை மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**6)**. தற்போது தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், எதிரி மீது இ.த.ச.பிரிவு 272, 273, 328 மற்றும் r/w 59 of FSSA-2006, 7(5) of Cotpa Act 2003 & 77 of Juvenile Justice Act 2015 இன் படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

**7). தீர்வு:**

(I) குற்றமுறையிடுபவரான குவாகம் காவல் நிலைய ஆய்வாளர் எதிரி மீது தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையில், கடந்த 10.10.2023 ஆம் தேதி 12.45 மணிக்கு அசாவீரன் குடிகாடு வடக்குத்தெருவில் எதிரிக்கு சொந்தமான பெட்டிக் கடையில் அரசால் தடைசெய்யப்பட்ட மனித உடலுக்கும், உயிருக்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய சுமார் 20 கிராம் எடையுள்ள Hans Chaap Tobacco – 7 பாக்கெட்டுகளை பொதுமக்கள் மற்றும் இளம்சிறார்கள் பார்க்கும்படி வைத்திருந்தும், அதனை வெளிப்படையாக வைத்து பொதுமக்கள் மற்றும் இளம்சிறார்களுக்கு விற்பனை செய்ததற்காக இ.த.ச.பிரிவு 272, 273, 328 மற்றும் r/w 59 of FSSA–2006, 7(5) of Cotpa Act 2003 & 77 of Juvenile Justice Act 2015 இன் கீழ் அவர் தண்டிக்கப்படத்தக்கவர் என்றும் அரசுத் தரப்பு சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.4 வரை விசாரிக்கப்பட்டனர். இதில் அ.சா.1 – முதல் நிலைக்காவலர், அ.சா.2 – முதல் நிலைக்காவலர், அ.சா.4 – புலன்விசாரணை அதிகாரி, அ.சா.3 இவ்வழக்கின் எதிரியின் பெட்டிக்கடையில் ஹான்ஸ் வாங்கியது சம்மந்தமாக விசாரிக்கப்பட்ட நபர் ஆவார். மேலும், அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.4 சுமார் 20 கிராம் எடையுள்ள Hans Chaap Tobacco – 7 பாக்கெட்டுகளை பொதுமக்கள் மற்றும் இளம்சிறார்கள் பார்க்கும்படி வைத்திருந்தும், அதனை வெளிப்படையாக வைத்து பொதுமக்கள் மற்றும் இளம்சிறார்களுக்கு விற்பனை செய்ததற்காக எதிரி கைது செய்யப்பட்டதாக அவர்கள் சாட்சியம் அளித்துள்ளனர். தடய அறிவியல் இரசாயன பகுப்பாய்வு அறிக்கை அ.த.சா.ஆ.4 ஐ பரிசீலனை செய்ததில், அதில் நிக்கோடின் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்று சான்று வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஹான்ஸ் பாக்கெட்டைப் பொறுத்தும், அதனால் ஏற்படும் பாதிப்புகளை குறித்தும் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் அவர்களிடம் விசாரணை செய்து பெற்ற கருத்துரையானது அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு

செய்யப்படுகின்றது. மேற்படி அ.த.சா.ஆ.5 ஐ பரிசீலனை செய்கையில், நிக்கோடின் மனித உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் உடல் முழுவதும் பல்வேறு பாகங்களை பாதிக்கலாம் என்றும், இதயதுடிப்பு, இரத்த அழுத்தம், மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் என்றும், தலை சுற்றல், தூக்ககலக்கம், தலைவலி, குமட்டல், வாந்தி, மூச்சு திணறல், நடுக்கம், வயிற்றுப் புண், வயிற்றுப்போக்கு, அஜீரணம் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும், நிக்கோடின் பயன்படுத்துவதை நிறுத்துவதால் அது வலிப்பு அறிகுறிகளை ஏற்படுத்தும், நிக்கோடினை மெல்லுவதால் உமிழ்நீத் கொட்டுதல், வாயில் கட்டிகள் மற்றும் வாய்புற்று நோய் ஏற்படும். நிக்கோடினை புகைப்பதால் நுரையீரல் புற்றுநோய் உண்டாகும் என்றும் கருத்துரை வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி நச்சுப் பொருட்கள் இருந்ததை அரசுத் தரப்பு மேற்கூறிய ஆவணத்தின் மூலம் நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகையால், இவ்வழக்கு முழுவதுமாக காவல் துறை அதிகாரிகளின் சாட்சியங்களைச் சார்ந்தே அமைந்துள்ளது.

(ii) இது குறித்து கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தம்முடைய வாதத்தில், கைப்பற்றுதல் மகசரில் காவல்துறையைச் சார்ந்தவர்களிடம் மட்டுமே சாட்சியாக கையொப்பம் பெறப்பட்டுள்ளது. மற்ற சாட்சிகள் எவரிடமும் மேற்படி மகசரில் சாட்சி கையொப்பம் பெறவில்லை என்பதால், ஆய்வாளர் அங்கு இருந்தாரா என்பதே சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்றும், மேற்படி இவ்வழக்கில் மற்ற சம்பவ இட சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை என்பதால், அரசுத் தரப்பு வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

இது குறித்து பரிசீலனை செய்கையில், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அளித்துள்ள அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

"பொதுவாக இது போன்ற வழக்குகளை சுகாதாரத்துறையும், உணவு பாதுக்காப்பு துறையும் கடையை ஆய்வு செய்து புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். அதேபோல் இந்த வழக்கில் புகார்தாரரும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததும் நான்தான் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் தகவலின் வகையில் **Suo Moto** என்று போட்டுள்ளோம் என்றால் சரிதான். எந்த வகையில் **suo Moto** என்று போட்டேன் என்றால் நானே வழக்கினை பதிவு செய்ததால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். எனக்கு இரகசிய தகவல் எதன்மூலமாக வந்தது என்றால் நான் அந்த பக்கம் போகும்போது ஒருவர் சொன்னார். நான் அன்றைய தினம் காவல் நிலையத்தில் எத்தனை மணியில் இருந்து எத்தனை மணி வரை இருந்தேன் என்றால் காலையில் 10.30 வரை இருந்தேன். அன்றாடம் பணிகளை குறித்து காவல் நிலை பொது நாட்குறிப்பேட்டில் குறித்து வைப்பது வழக்கம் என்றால் சரிதான். அந்த பொது நாட்குறிப்பின் அசலையோ, நகலையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பணிக்குறித்து தனியாக ஒரு குறிப்பேடு வைத்திருப்பேன் என்றால் சரிதான். அந்த குறிப்பேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் பொருட்கள் எல்லாம் வெளியில் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான், எல்லா கடைகளிலும் கிடைக்காது. நான் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களை ஆஜர் எதிரி தயாரிக்கவில்லை என்றால் சரிதான். குவாகம் காவல் நிலையத்தில் இருந்து எந்த வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் மூவரும் தனித்தனியாக அவரவர் வாகனத்தில் சென்றோம். நான் கைப்பற்றப்பட்ட சொல்லப்படும் கடைக்கு அருகில் மாரியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான், அதில் எப்போதும் 10, 20 பேர்கள் அமர்ந்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் பொருட்களை கைப்பற்றியபோது பொதுமக்களை சாட்சியாக அழைத்தும் வரவில்லை என்று சொல்லியுள்ள நிலையில் யார்யாரிடம் கேட்டோம் என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை..........

...........இந்த வழக்கில் பொது மக்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் முன் வராததால் சேர்க்கவில்லை"

என்று சாட்சியமளித்துள்ளார்.

(iii) மேலும் இவ்வழக்கில் எதிரியின் கடையிலிருந்து ஹான்ஸ் வாங்கியதாக குறிப்பிடப்படும் அ.சா.3 அரசு தரப்பில் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வழக்குப்பொருள் அ.த.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி அந்த கைப்பற்றுதல் மகசரில் பொதுமக்கள் யாரும் சாட்சி சொல்ல முன் வராததால் கைப்பற்றுதல் மகசர் சாட்சியாக மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் மட்டுமே கையொப்பம் இட்டுள்ளனர். வழக்கு பொருள் கைப்பற்றப்பட்ட இடத்தில் சாட்சிகள் யாரும் கிடைக்காத பட்சத்தில், மற்ற சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்பதற்காக மட்டுமே அரசுத் தரப்பு வழக்கை முற்றிலுமாகத் தள்ளுபடி செய்ய முடியாது. அங்கு பொதுமக்கள் இருந்தார்களா இல்லையா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. மேற்படி அ.சா.4 தனது சாட்சியத்தில், வழக்கு பொருள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடத்தில் மாரியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான் என்றும், அதில் எப்போதும் 10, 20 பேர்கள் அமர்ந்திருப்பார்கள் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாறு இருக்கையில், மேற்படி வழக்கு பொருளை கைப்பற்றியபோது அங்கிருந்த பொதுமக்களிடம் சாட்சி கையொப்பம் பெற்று அவர்களை இவ்வழக்கின் சாட்சியாக விசாரித்து மேற்படி எதிரிதான் இக்குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்று அரசு தரப்பில் தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. மேலும், மற்ற கண்ணுற்ற சாட்சிகளை விசாரிக்காதது குறித்து புலனாய்வு அதிகாரியிடமிருந்து எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. எனவே, மேற்படி பரிசீலனையிலிருந்து வழக்கு சம்பவத்தின்போது அங்கிருந்த தனிப்பட்ட சாட்சிகளை விசாரிக்காதது அரசுத் தரப்பு வழக்கிற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று இந்நீதிமன்றம்

கருதுகிறது. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து எதிரிதான் இக்குற்றத்தை செய்ததைக் குறிக்கும் வகையில் எந்தவொறு சாட்சியமும் ஆதாரமும் இல்லாத நிலையில், அரசு அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் சாட்சியங்கள் மட்டுமே அரசுத் தரப்பு வழக்கினை நிரூபிக்கப் போதுமானதாக அமையாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அரசு தரப்பில் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**முடிவாக,**

இவ்வழக்கில் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 272, 273, 328 மற்றும் r/w 59 of FSSA-2006, 7(5) of Cotpa Act 2003 & 77 of Juvenile Justice Act 2015 இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் உரிய முறையில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரி குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 235(1) இன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி எதிரிக்கு பிணைமுறி ஏதேனும் இருப்பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள **(Form 91) – சுமார் 20 கிராம் எடையுள்ள 7 Hans Chaap Tobacco** செந்துறை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்து விட்டபடியால் அதனைப் பொறுத்து உத்தரவு பிறப்பிக்கவில்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 06.08.2026 இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHANDIKUPPAM SHANMUGAM MANIMEKALAI

Digitally signed by MUTHANDIKUPPAM SHANMUGAM MANIMEKALAI
Date: 2026.08.06 17:42:08 +0530

**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரியலூர்.**

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திரு.இளவரசன் | கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 2 | திரு.கலைவாணன் | கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 3 | திரு.ஏழுமலை | வழக்கில் சம்மந்தப்பட்டவர் |
| 4 | திரு.புண்ணியக்கோடி | புலன்விசாரணை அதிகாரி |

**எதிரிதரப்பு சாட்சிகள்:–** இல்லை

**எதிரிதரப்பு ஆவணங்கள்:–இல்லை**

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| Material Object No. | Description of the Exhibit | Proved by/Attested by |
|---|---|---|
| 1 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.4 |
| 2 | படிவம் – 91 | அ.சா.4 |
| 3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| 4 | இரசாயன பகுப்பாய்வு அறிக்கை | அ.சா.4 |
| 5 | மருத்துவ கருத்துரை | அ.சா.4 |

MUTHANDIKUPPAM SHANMUGAM MANIMEKALAI

Digitally signed by MUTHANDIKUPPAM SHANMUGAM MANIMEKALAI
Date: 2026.08.06 17:42:21 +0530

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.